padippakam



# கனவான்களை உருவாக்கிய கல்விக்கூடங்கள்

## பகுதி II

5

தென்னிலங்கையில் பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் ஆரம்பித்த காலத்திலேயே யாழ்ப்பாணத்திலும் சைவ மறுமலர்ச்சி இயக்கம் ஒன்று ஆரம்பித்தது.

தென்னிலங்கையில் ஐரோப்பியரின் வருகையின் பின் பௌத்தமும், சிங்களமும் புறக்கணிக்கப்பட்டது போலவே யாழ்ப்பாணத்திலும் சைவமும், தமிழும் புறக்கணிக்கப்பட்டது. கி.பி. 8-ம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாண மன்னர்களால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வந்த சைவசமயம் அவர்களது வீழ்ச்சியுடன் கவனிப்பாரற்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. மன்னர்களையும், அவர்களது பிரதானிகளையும் சார்ந்து நின்று அவர்களது தயவில் தமிழ் புலவர்களாலும், பண்டிதர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வந்த தமிழ் கல்வியும், ஆதரிப்பாரற்று நலிந்து போய் விட்டது.

போர்த்துக்கேயர் காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த பெரிய சைவக் கோவில்களெல்லாம் இடித்துத் தள்ளப்பட்டன. பல இடங்களில் அந்தக் கோவில்கள் இருந்த இடங்களில் கிறிஸ்தவ தேவாலயங்கள் நிறுவப்பட்டன. கிறிஸ்தவ மதக் கல்விக்கென அத் தேவாலயங்களின் அருகிலேயே கல்விக் கூடங்களும் அமைக்கப்பட்டன.

சைவசமயத்தை கடைப்பிடிப்பதற்கு போர்த்துக்கேயரால் விதிக்கப்பட்ட தடை ஒல்லாந்தர் காலத்தில் தளர்த்தப்பட்டாலும், முன்பிருந்த செல்வாக்கான நிலைக்குத் திரும்ப அனுமதிக்கப்படவில்லை. சைவக் கோவில்களை நிறுவுவதற்கும் புனரமைப்பதற்கும் மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியே வழங்கப்பட்டு வந்தது. ஒல்லாந்தர்கள் தங்களது புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்புவதற்காக, போர்த்துக்கேயர் பாணியில் பெரிய தேவாலயங்களையும், அதையொட்டிய பெரிய கல்விக் கூடங்களையும் நிறுவினர். இக் கல்விக்கூடங்களில் டச்சு (ஒல்லாந்துமொழி போர்த்துக்கேயம், லத்தீன்) ஆகிய மொழிகளுடன் தமிழும் ஒரு மொழியாகக் கற்பிக்கப்பட்டாலும் மதக் கல்வியே அங்கு பிரதானமாக இருந்தது. 1760-ம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கின்படி யாழ்ப்பாணக்குடாநாடு முழுவதிலுமிருந்த அனைத்துக் கோயில் பற்றுப் பாடசாலைகளிலும் 28064 பேர் கல்விகற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வந்த பின்பு அங்கு மிகப் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. இலங்கையின் நிர்வாக வேலைகளைக் கவனிப்பதற்கு ஆங்கிலம் தெரிந்த ஊழியர் படையொன்றை யாழ்ப்பாணத்திலிருந்து திரட்ட வேண்டிய தேவை ஆங்கிலேயர்களுக்கு ஏற்பட்டதால் அங்கு ஆங்கிலக் கல்வியை விருத்தி செய்வதற்கு அவர்கள் நடவடிக்கையெடுத்தனர்.

1832-ம் ஆண்டு அதுவரை இங்கிலாந்து திருச்சபை மற்றும் அங்கிலிக்கன் சபை என்பவற்றின் பொறுப்பிலிருந்த கல்வி நிறுவனங்கள் அனைத்தும் (காலனிய) அரசின் பொறுப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன.

அதேவருடம் யாழ்ப்பாணத்தில் ஆங்கிலக் கல்வியை ஊக்குவிப்பதற்கு அமெரிக்கன் மிஷனுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இச்சபை

1. கிராமியப் பாடசாலைகள்
2. நகர்ப்புறப் பாடசாலைகள்
3. விடுதியுடன் கூடிய கல்லூரிகள்

அமைப்பது என்ற வகையில் செயலில் இறங்கியது.

1833-ம் ஆண்டுக்குள் கிராமியப் பாடசாலைகள் என்ற வகையில் உடுவிலில் 19 பாடசாலைகளும் வட்டுக்கோட்டையில் 18 பாடசாலைகளும் பண்டத்தரிப்பில் 12 பாடசாலைகளும், மானிப்பாயில் 10 பாடசாலைகளும் உட்பட மற்ற இடங்களையும் சேர்த்து 78 பாடசாலைகளும் நிறுவப்பட்டன. 1833-ம் ஆண்டு இந்த 78 பாடசாலைகளிலும் ஆண், பெண் உட்பட 3095 பேர் கல்வி கற்றனர்.

நகர்ப்புறப் பாடசாலைகள் என்ற வகையில் வட்டுக்கோட்டை, மானிப்பாய், உடுவில் ஆகிய மூன்று இடங்களிலும் 3 பாடசாலைகள் உருவாக்கப்பட்டன.


**1845 ஆண்டளவில் ஆங்கிலம் கற்க இந்துநிலப்பிரபுத்துவக் கல்விமான்களுக்கும், கிறிஸ்தவத் தமிழ்க் கல்விமான்களுக்கும் இடையில் யார் பெரியவர்கள் என்ற போட்டி ஏற்படத் தொடங்கியது. சாதி சமூக அந்தஸ்த்தை தீர்மானிக்கும் கருவியாக தன்னுடைய பழைய அந்தஸ்தை எடுத்துக்கொண்டது. யாழ்ப்பாண சமூகத்தின் இடைநிலை சாதியில் இருந்தவர்கள், கிறிஸ்தவத்திற்கு மதம் மாறி ஐரோப்பிய மொழிக் கல்வி கற்று அரச உத்தியோகங்களைப் பெற்றிருந்த போதும் புதிதாக ஆங்கிலக் கல்வி கற்க மேல்தட்டு இந்து நிலப்பிரபுக்கள் அவர்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை.**

1833-ல் இம் மூன்று பாடசாலைகளிலும் 75 மாணவர்கள் கல்வி கற்றனர்.

விடுதியுடன் கூடிய கல்லூரிகள் என்ற வகையில் 1832-ல் வட்டுக்கோட்டையில் மட்டும், முதலாவது கல்லூரி நிறுவப்பட்டது. அந்த வருடத்தில் இக் கல்லூரியில் 148 மாணவர்கள் கல்வி கற்றனர்.

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த போர்த்துக்கேயரையும் ஒல்லாந்தரையும் விட, ஆங்கிலேயரே, யாழ்ப்பாண சமூகத்தைப் பற்றி, அதன் குணாம்சங்களைப் பற்றி மிகத் துல்லியமாக எடை போட்டு வைத்திருக்கின்றனர்.

சாதியச் சமூகமான யாழ்ப்பாணச் சமூகம் வன்னித் தமிழர்கள், மட்டக்களப்புத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள் என இலங்கையின் ஏனைய பகுதியிலிருந்து தமிழ் சமூகத்தினருடன் முரண்பாடுகளை கொண்டிருந்த அதே நேரத்தில் தமக்குள்ளேயும் பாரிய அக முரண்பாடுகளைக் கொண்டிருந்தது. இந்த முரண்பாடுகளுக்கான அடிப்படைக்காரணியாகவும் அதே வேளையில் இவற்றைக் கட்டிக் காக்கின்ற நிறுவனமாகவும் பார்ப்பனிய இந்து மதம் விளங்கியது.



தவத்திரு ஆறுமுக நாவலரவர்கள்

போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலத்தில் இந்து மதத்தின் மீது நேரடியான தாக்குதல் தொடுக்கப்பட்ட போது யாழ்ப்பாண சாதிய அமைப்பு நெருங்குதலுக்குள்ளானது. கீழ்நிலை சாதிகள் இடைநிலை சாதிகள் மேல்நிலைச் சாதிகள் என்ற அதன் படிமுறை வடிவம் சிதையத் தொடங்கியது.

மேல் நிலை சாதியில் ஒரு பிரிவினரும், இடைநிலை சாதியில் மேல் தட்டுப் பிரிவினரும், கிறிஸ்தவமயமானதனால் ஒரு புதிய கிறிஸ்தவ அமைப்பு அங்கு உருப்பெற்றது. இந்து நிலப் பிரபுத்துவ உறவுகள் நசுக்கப்பட்டன. அதை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திமுறை அழிக்கப்பட்டு, காலனிய அரசுகளின் தேவையை மையப்படுத்திய உற்பத்திமுறை உருவாக்கப்பட்டது. 1000 வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாண சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்த இந்த நிலப் பிரபுத்துவ வர்க்கம் பல்லெல்லாம் பிடுங்கப்பட்டு கால்கள் முறிக்கப்பட்ட சிங்கத்தின் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது. கொத்தடிமைகளாக நடத்தப்பட்டுவந்த பஞ்சமர்களும், அவர்களுக்குக் கீழிருந்த அடித்தட்டு சாதியினரும் காலாகாலமாக தங்களுக்கு வதிக்கப்பட்டிருந்த 'அடிமைச் சட்டங்களை உடைக்கத் தலைப்பட்டனர்.

இத்தகைய ஒரு சூழ்நிலையை தம்து ஆட்சியில் தொடர அனுமதித்தால் தாங்கள் எதிர்பார்க்கின்றபடி எப்போதும் தங்களைச் சார்ந்தே இருக்கிற தங்களது நலனுக்காகவே உழைக்கக் கூடிய விசுவாசிகள் கூட்டம் ஒன்றை அங்கு உருவாக்கமுடியாது என்பதை ஆங்கிலேயர்கள் உணர்ந்தார்கள்.

கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தவர்கள்தான் மிசனறிப் பாடசாலைகளில் கல்விகற்க முடியும் என்ற நிலையை மாற்றி, இந்துக்களும் மதம் மாறாமலே ஆங்கிலக் கல்விகற்க அனுமதிக்கப்பட்டனர். இந்து மதத்தின் மீதிருந்த தடைகள் அகற்றப்பட்டு அம் மதச் செயற்பாட்டுக்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டது.

ஆங்கிலேயரின் இந்த யுத்தி அவர்கள் எதிர்பார்த்த பலனை அளித்தது. போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் ஆட்சியில் ஒடுங்கி முடங்கிப் போய்க்கிடந்த யாழ்ப்பாண இந்து நிலப்பிரபுத்துவ வர்க்கம் போட்டி போட்டுக் கொண்டு அரச பாடசாலைகளிலும், மிசனறிப் பாடசாலைகளிலும் சேர்ந்து ஆங்கிலக் கல்வி கற்க ஆரம்பித்தது.

1845 ஆண்டளவில் ஆங்கிலம் கற்க இந்துநிலப்பிரபுத்துவக் கல்விமான்களுக்கும், கிறிஸ்தவத் தமிழ்க் கல்விமான்களுக்குமிடையில் யார் பெரியவர்கள் என்ற போட்டி ஏற்படத் தொடங்கியது. சாதி, சமூக அந்தஸ்த்தை தீர்மானிக்கும் கருவியாக தன்னுடைய பழைய அந்தஸ்தை எடுத்துக்கொண்டது. யாழ்ப்பாண சமூகத்தின் இடைநிலை சாதியில் இருந்தவர்கள், கிறிஸ்தவத்திற்கு மதம் மாறி ஐரோப்பிய மொழிக் கல்வி கற்று அரச உத்தியோகங்களைப் பெற்றிருந்த போதும் புதிதாக ஆங்கிலக் கல்வி கற்க மேல்தட்டு இந்து நிலப்பிரபுக்கள் அவர்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை. இந்த அந்தஸ்துப் போட்டியில் முன்பே கிறிஸ்தவ மதத்திற்கு மாறியிருந்த யாழ்ப்பாண மேற்தட்டு வர்க்கம் தனது இந்து சாதிப் பெயரைச்சொல்லி புதிய ஆங்கில இந்து நிலப்பிரபுத்துவ வர்க்கத்துடன் சமரசம் செய்து கொண்டது. இதனால், பார்ப்பனியச் சாதி அமைப்பு கிறிஸ்தவ மதத்திற்குள்ளும் புகுந்து கொண்டது.

இந்த நிலையில்தான் சைவத்தையும், தமிழையும் பாதுகாக்க வேண்டும் என்று ஆறுமுகநாவலர் போர்க்கொடி தூக்கிக்கொண்டு, இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை ஆரம்பித்தார். 1848-ம் ஆண்டு சைவத்தையும், தமிழையும் கற்பிப்பதற்கென்று யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் சைவப் பிரகாசவித்தியாசாலை என்ற முதல் சைவத் தமிழ் பாடசாலை அவரால் ஆரம்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையும் இணுவில் அம்பிகைபாகர் வித்தியாசாலையும், கோப்பாய், கோண்டாவில், புலோலி, மூளாய், வேலணை, கொழும்புத்துறை ஆகிய இடங்களிலும் சைவத் தமிழ் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த பாடசாலைகளில் சேர்ந்து கல்விகற்பதற்கான ஒரே தகுதி, உயர்சாதி சைவர்களாகப் பிறந்திருக்க வேண்டும் என்பதே.

**- நக்கீரன்**

படிப்பகம்